Crl.Misc.39

DEPOSITION OF WITNESS
( Chapter XXIII Code of Criminal Procedure.)
-------

IN THE COURT OF **JUDICIAL MAGISTRATE COURT, ARUPPUKOTTAI**.

| | | |
|---|---|---|
| Miscellaneous | :: | **CC 61/2024** |
| Deposition of witness for | :: | **PW.2** |
| Name | :: | **தமிழ்மோகன் (சிறப்பு சார்பு ஆய்வாளர் )** |
| Father's Name | :: | |
| Village | :: | |
| Taluk | :: | |
| Age | :: | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 2026

---

**1, 2 எதிரிகள் ஆஜர் இல்லை. பிரிவு 317 குவிமுச வின் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர் 09.06.2026**

**முதல் விசாரணை**:

1. நான் தற்போது பரளச்சி காவல் நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இவ்வழக்கின் நிகழ்நிலை புகார்தாரர் எதிரிகளுடன் சமாதானமாக சென்று சமாதான மனு தாக்கல் செய்துள்ளதாலும் இவ்வழக்கின் மற்ற அரசு தரப்பு சாட்சிகள் பிறழ் சாட்சியம் அளித்துள்ளதாலும், இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரியான சார்பு ஆய்வாளர் மாரியப்பன் அவர்கள் தற்போது பணிமாறுதலில் சென்று விட்டபடியாலும் நீதிமன்ற கால விரயத்தினை கருத்தில் கொண்டு மேற்படி புலன் விசாரணை அதிகாரியின் விசாரணை நடைமுறை பற்றி நன்கு தெரியும் என்பதால் வழக்கு கோப்பினை பார்வையிட்டு ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன்.

2. கடந்த 18.09.2023 ம் தேதி காலை 09.30 மணிக்கு பரளச்சி காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளர் மாரியப்பன் அவர்கள் நிலைய பொறுப்பில் இருந்தபோது கீழ்க்குடி கிராமத்தை சேர்ந்த ராமர் மகன் கருப்பையா என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவினை பெற்று பரளச்சி காவல் நிலையம் வந்து குற்ற எண். 82/2023 சட்டப்பிரிவுகள் 147, 341,

294(ஆ), 323, 506(2) இதசவின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். ( **முதல் தகவல் அறிக்கை அசாஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** பின்னர் அசல் முதல் தகவல் அறிக்கை மற்றும் புகார் மனுவினை கனம் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கும் மற்ற நகல்களை சம்மந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்துள்ளார்.

3. பின்னர் சார்பு ஆய்வாளர் மாரியப்பன் அவர்கள் வழக்கு கோப்பினை விசாரணைக்கு எடுத்து கொண்டு அன்றைய தினம் 11.00 மணிக்கு வழக்கின் சம்பவ இடமான கீழ்க்குடி கிழக்கு தெருவில் உள்ள புகார்தாரரின் வீட்டின் அருகே சென்று சாட்சிகள் ராமர், மாணிக்கம் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்து சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றுள்ளார். **(பார்வை மகஜர் அ.சா.ஆ.3 ஆகவும் மற்றும் மாதிரி வரைபடம் அ.சா.ஆ. 4 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது)**

**4**. பின்னர் அன்றைய தினம் புகார்தாரர் கருப்பையா சாட்சிகள் துர்கா, அந்தோணியம்மாள், நாகம்மாள், காளியம்மாள், ஆசீர்வாதம், பொன்னுச்சாமி, ராஜாங்கம், முத்துமணி, சந்தோஷம் மற்றும் பார்வை மகஜர் சாட்சிகளான ராமர், மாணிக்கம் ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

5. பின்னர் அன்றைய தினமே இவ்வழக்கின் விசாரணையில் சம்பவம் உண்மை என்பதும், முதல் தகவல் அறிக்கையில் கண்டுள்ள 6 எதிரிகளில் இவ்வழக்கின் எதிரிகளான வேலு, சசிக்குமார் ஆகியோர்களை தவிர மற்ற நபர்கள் வழக்கு சம்பவத்தில் ஈடுபடவில்லை என்பது தெரிய வந்ததால் மேற்படி எதிரிகளை இவ்வழக்கில் இருந்து நீக்கம் செய்தும், இவ்வழக்கின் சட்டப்பிரிவுகளில் 147 நீக்கம் செய்தும் எதிரிகள் நீக்கல் மற்றும் சட்டப்பிரிவு நீக்கல் அறிக்கை தயார் செய்து கனம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். **(எதிரிகள் நீக்கல் மற்றும் சட்டப்பிரிவு நீக்கல் அறிக்கை அசாஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

6. பின்னர் சார்பு ஆய்வாளர் மாரியப்பன் இவ்வழக்கின் எதிரியை விசாரித்தால் தான் வழக்கின் முழுவிரம் தெரியவரும் என்பதால் 28.09.2023ம் தேதி நிலையத்தில் ஆஜராகுமாறு அறிவுறுத்தி குவிமுச பிரிவு 41A ன் கீழ் சம்மன் சார்வு செய்யப்பட்டதன் அடிப்படையில்

28.09.2023ம் தேதி நிலையத்தில் ஆஜரான எதிரிகளிடம் ஒப்புகை படிவத்தில் கையொப்பம் பெற்று நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு அறிவுறுத்தி உள்ளார்.

7. பின்னர் 03.11.2023ம் தேதி கமுதி அரசு மருத்துவமனை சென்று இவ்வழக்கில் காயம்பட்ட கருப்பையாவிற்கு சிகிச்சை அளித்த மேற்படி மருத்துவமனை மருத்துவர் தன்வந்த் அவர்களிடமிருந்து விபத்து பதிவேடு பெற்று மருத்துவரின் வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். **(கருப்பையாவின் விபத்து பதிவேட்டுடன் கூடிய காயசான்று அசாஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

8. பின்னர் அன்றைய தினம் வழக்கின் புலன் விசாரணை முடித்து எதிரிகள் வேலு, சசிக்குமார் ஆகியோர்கள் மீது சட்டப்பிரிவுகள் 294(ஆ), 341, 323, 506(2) இதசவின் கீழ் குற்ற இறுதி அறிக்கை கனம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை.**

1. சொன்ன மாதிரி சொன்ன நாள் நேரத்தில் அ.சா.1 னிடம் புகார் மனுவைப் பெற்று வழக்கினை பதிவு செய்யவில்லை என்றால் சரியல்ல. சொன்ன மாதிரி சொன்ன நாள் சொன்ன நேரத்தில் பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. சொன்ன நாள் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் சாட்சிகளை விசாரணை செய்யவில்லை என்றால் சரியல்ல. வழக்கு ஆவணங்கள் அனைத்தும் வழக்கிற்காக காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. சாட்சிகளை சரிவர விசாரிக்காமல் எதிரிகளுக்கு எதிராக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**
**இல்லை.**